பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-620 024.
(Re-Accredited with "A" Grade by NAAC)
பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி-620 024.
( Tel: 0431-2407072 & 0431-2407092 Fax: 0431-2407045 www.bdu.ac.in)

## ஓட்டுநர் (Driver) பதவிக்கு விண்ணப்பம் செய்வோருக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்: (General Instructions).

| பதவியின் பெயர் | ஓட்டுநர் |
|---|---|
| கல்வித் தகுதிகள் | **Essential: 1.** A Pass in VIII Standard.<br>**2.** Possession of Licence for driving Heavy Vehicles and must have minimum driving experience of atleast 5 years in Heavy Vehicles.<br>**அத்தியாவசியம்:**<br>**("எட்டாம் வகுப்பு தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும். கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும். மற்றும் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான உரிமம் பெற்று 05 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும்").** |

**01.** ஓட்டுநர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியுள்ள நபர்கள் முதலில் இப்பல்கலைக்கழகத்தில் தின ஊதிய அடிப்படையில் (நாளொன்றுக்கு ரூ.264/- வீதம்) பணியமர்த்தப்பட்டு, பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருப்பின் பின்னர் அப்பணியாளர்கள் இப்பல்கலைக்கழகத்தில் ஓட்டுநர் பதவியில் அப்பதவிக்குரிய ஊதியக்கட்டு மற்றும் தரஊதியத்தில் நிரந்தரப் பதவியில் பணியமர்த்தப்படுவார்கள்.

**02.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய கல்வித் தகுதிகள், முன்அனுபவம், வயது ஆகிய விவரங்களை **09.03.2019** அன்றைய நிலவரப்படி தங்களுடைய விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும்.

**03.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அதிக பட்ச வயது வரம்புகள் **09.03.2019** தேதியில் கீழ்கண்டுள்ளவாறு இருக்க வேண்டும்.

01. General Category – 30 years.
02. B.C./M.B.C./D.N.C. – 32 years.
03. SC /SCA/ST/PH/DW – 35 years

**04.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட உரிய விண்ணப்ப படிவத்தில் மட்டுமே உரிய விவரங்களை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். மேலும், விண்ணப்பிக்கும் விண்ணப்ப படிவத்தோடு தங்களுடைய கல்வித் தகுதி சான்றிதழ்கள், சாதிச்சான்றுகள், ஓட்டுநர் உரிமம் மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்களின் நகலினை இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**05.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக (Registration Fee) (GT/BC/BCM/MBC/DNC- Rs.100/- ஏதாவது ஒரு தேசியமையமாக்கப்பட்ட வங்கியில் (Nationalized Bank), பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி என்ற பெயரில் எடுக்கப்பட்ட **(09.03.2019 தேதிக்கு பின்னர் எடுத்திருக்க வேண்டும்)** காசோலையினை (crossed demand draft) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். மேலும், காசோலையின் பின்புறம் தங்களின் பெயர், மற்றும் முகவரியினை தெளிவாக குறிப்பிட வேண்டும். **SC/SCA/ST ஆகியோர்களுக்கு பதிவு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.**

**06.** பதிவுக்கட்டணத்தை எந்த நிகழ்வுகளின் அடிப்படையிலும் திரும்பி வழங்கப்பட மாட்டாது. மேலும், பதிவு கட்டணத்தை Cheque / Money Order / Postal Order / Cash ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**07.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் செய்வோர், இதற்குமுன் ஏதேனும் பணியில் இருப்பின், அவர்கள் இப்பதவிக்குரிய விண்ணப்பத்தை தாங்கள் பணிபுரியும் அலுவலகத்திடமிருந்து உரிய வழியாக அனுப்பப்பட வேண்டும்.

**08.** ஓட்டுநர் பதவிக்கான எழுத்துத் தேர்வு மற்றும் ஓட்டுநர் பயிற்சித் தேர்வு ஆகியவற்றில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய சொந்த செலவில் மட்டுமே வருகை தரவேண்டும்.

**09.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் செய்வோர், ஏதேனும் வகையில் சிபாரிசுகள் (Canvassing in any form) செய்யப்படுமாயின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**10.** ஓட்டுநர் பதவிக்கு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **"பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி-620 024"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். மேலும், தபால் கவரின் மேல் பகுதியில் "ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" – 2019 எனக் குறிப்பிட வேண்டும்.

**11. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் சேர்ப்பிப்பதற்கு கடைசி தேதி 29.03.2019, மாலை 5.00 மணி ஆகும்.**

**12.** ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்பம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலோ, பதிவுக் கட்டணத்திற்கான காசோலை இணைக்கப்படாமலோ, மற்றும் கடைசி தேதிக்குப் பின்னர் பெறப்பட்டாலோ உடனடியாக நிராகரிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

**13.** ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரை எழுத்துத் தேர்வு மற்றும் ஓட்டுநர் பயிற்சித் தேர்வு ஆகியவற்றிற்கு அழைப்பதற்கும் அல்லது அழைக்காமல் இருப்பதற்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

**14.** இப்பல்கலைக்கழகத்திற்கு மேற்கண்ட பதவியினை நிரப்பவும் மற்றும் நிரப்பாமல் இருப்பதற்கும் அதிகாரம் உள்ளது.

**- - x x - -**

# பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-620 024.

**(Re-Accredited with “A” Grade by NAAC)**

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி-620 024.

(Tel: 0431-2407072 & 0431-2407092 Fax: 0431-2407045 www.bdu.ac.in)


அண்மையில் எடுக்கப்பட்ட தங்களுடைய கலர் புகைப்படத்தை இங்கு ஒட்டவும்.

## ஓட்டுநர் (Driver) பதவிக்கான விண்ணப்ப படிவம்

**(விளம்பர எண், B1/006336/2011, Dt: 07 - 03 - 2019)**

01. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :

02. தந்தையின் பெயர் :

03. பிறந்த தேதி :

04. பாலினம் :

05. சாதியின் விபரங்கள் :

06. ஆதார் எண் :

07. கல்வித் தகுதி விபரங்கள் :

08. ஓட்டுநர் உரிமம் பற்றிய முழுத் தகவல்கள் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருந்தால் அதன் பற்றிய விவரம்

09. முன்அனுபவம், மற்றும் அதற்குறிய சான்றிதழ்களின் நகல் :

10. நிரந்தர முகவரி :

11. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி (தொலைபேசி மற்றும் கைப்பேசி எண்) :

மேற்குறிப்பிட்டுள்ள என்னுடைய சுய விவரங்கள் அனைத்தும் உண்மை எனச் சான்றளிக்கிறேன். மேலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் தவறு ஏதேனும் இருப்பதாக தெரியவந்தால் பல்கலைக்கழக நிர்வாகம் எடுக்கும் எந்த முடிவிற்கும் நான் கட்டுப்படுகிறேன் என்பதையும் உறுதியளிக்கிறேன்.

இடம்:

தேதி:

**கையொப்பம் :**

**முழுப்பெயர் :**